# அக்டோபர் 5 வள்ளலார் பிறந்த நாள்



ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையே என் மார்க்கத்தின் லட்சியம் என்ற வள்ளலாரின் பிறந்த நாள் அக்டோபர் 5 ஆகும்.

இவ்வுலக மனிதர்கள் எல்லோரும் இவ்வுலகில் துன்பமின்றி இன்பமாக வாழ்வதற்கு உரிமை படைத்தவர்கள் என்ற உண்மை உணர்த்தும் வகையிலும், தன்னால் மற்றவர்களுக்கு இம்சை இல்லாமலும் அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கியிருக்கும் அறிவைப் பெற்றிருக்கவேண்டும் என்ற உயரிய கருத்தினை வெளிப்படுத்துதே "உலக ஒருமைப்பாட்டுரிமை" ஆகும்.

தமிழ்நாட்டில் 1823ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் வடலூர் அருகில் அக்டோபர் 5ல் பிறந்தவர் இராமலிங்கம் என்ற வள்ளலார். இவர் கண்டு உலகிற்கு வெளிப்படுத்திய மார்க்கமே "சமரச சுத்த சன்மார்க்கம்" தன் மார்க்கத்திற்கு தனிக்கொடி தனி நெறி வகுத்துள்ளார். அம்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாக "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை" ஆகும் என 1872லேயே அறிவித்தவர் வள்ளலார்.

கடவுளின் திருவருளால் அவத்தைகள் எல்லாவற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் முடியும் என்ற உண்மையை தெரிந்துகொள்கிறார் வள்ளலார். தெரிந்துகொண்டது மட்டுமல்லாமல் தொடர்ந்து உண்மைக் கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்து வந்தார்கள். அதன்பயனாக திருவருள் கிடைத்து சாகாநிலையை வள்ளலார் பெறுகிறார்கள். இந்த உண்மையை உலகத்தார் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற "ஆன்மநேயத்தால்" தான் பெற்றிருந்த உண்மை அறிவு ஒழுக்கத்தால் உள்ளது உள்ளபடியே அறிவிக்கிறார்.

இறைவனிடம் கீழ்வருமாறு விண்ணப்பித்தும் வேண்டுகிறார் வள்ளலார் :

இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் ஜீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

மேலும் 22.10.1873ல் ஆற்றிய மகாபேருபதேசத்தில்;

என்னை யேறாநிலைமிசை யேற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமை இருந்தால் தான் தயவு வரும். தயவு வந்தால்தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள். என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படியிருந்தாலும், அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்: மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்து விடுவேன்.

நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும். இராத்திரிகூட "நான் இல்லாமல் இந்த ஜனங்கள் கணநேரம் இருக்க மாட்டார்களே என்று, என்று..." ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டேன். அது இங்கே இருக்கின்ற ஜனங்கள் மட்டில் மாத்திரம் மல்ல. உலகத்திலிருக்கின்ற எல்லா ஜனங்களையும் குறித்தே விண்ணப்பித்துக்கொண்டேன். ஏன் அப்படி ஆண்டவரிடத்தில் விண்ணப்பித்துக்கொண்டேன் என்றால்: எல்லவரும் சகோதரர்களாதலாலும், இயற்கையுண்மை யேகதேசங்க ளாதலாலும், நான் அங்ஙனம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை வைத்துக்கொண்டிருக்கின்றேன் என்கிறார் வள்ளலார்.

அண்டபிரபஞ்சங்களில் நிறைந்துள்ள இயற்கை உண்மை இயற்கை விளக்கத்தில் நாம் இதுவரை கண்டது துகள் அளவே. இந்நிலையில் உலகத்தார் அனைவரும் உண்மை அன்பால் உண்மை அறிவால் ஒன்றுப்பட்டு துன்பம் இன்றி இன்பம் அடைவதற்கே முயற்சித்தல் வேண்டும்.

இயற்கை பற்றிய விசாரணை என்பது ஆண்டவரின் நிலை குறித்த விசாரணையே. இயற்கையில் தோன்றியுள்ள அனைத்து உயிர்களுமே இறைவனின் அம்சம். ஜீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் (இயற்கை) உண்மை ஏக தேசங்கள் ஆவார்கள். எனவே ஒரு ஜீவனுக்கு ஒரு ஆபத்தால் துக்கப்படும்போது கேட்டபோது அறிந்தபோது அந்த ஜீவன் குறித்து உருக்கம் ஏற்படுவதே "ஆன்மஉரிமை" என்கிறார் வள்ளலார்.

நம்மைப் போல்தான் மற்ற உயிர்களும் இவ்வுலகில் வாழும் உரிமை கொண்டுள்ளது என்ற உண்மை அறிவை மனிதர்கள் பெற்றே ஆக வேண்டும். கருணை என்றால் பொதுவாக மனிதர்களிடத்திலே அன்பு இரக்கம் கொள்வது என்கிறோம். ஆனால் கருணைக்கு வள்ளலார் தரும் விளக்கம்; எல்லா உயிர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்தில் அன்புமே என்கிறார்.

வள்ளலார் சொல்லியது போல் உலகத்தார் எல்லாரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டே நம் ஒவ்வொருவரின் எண்ணங்களும் செயல்களும் இருக்கவேண்டும். இதுவே நம் லட்சியம்.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்

ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்

ஒருமைஉளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்

இருளாமை உறல்வேண்டும் எனைஅடுத்தார் சுகம்வாய்ந்

திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்

ஒருமையின் உலகெலாம் ஓங்குக. - வள்ளலார்



அன்புடன்

**இராமலெட்சுமி இளங்கோ**, M.A.,

நிறுவனர், கருணை சபை-சாலை, மதுரை.

செல் : 94876 83114